முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 17 திகதி முதல்

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 24 திகதி வரை

(01.01.2023 ஞாயிறு முதல் 08.01.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. மனிதனே மனிதனை மாய்க்கின்ற
   மாண்பிலா செயல்கள் மலிந்துவர
   இனியும் பொறுக்க முடியாதுஎன
   யுகபரத்தில் வேலவன் சக்தியாக
2. சக்தியாக வந்த ஆறுமுக அரங்கனே
   சற்குருவேஉமை போற்றி இனிதே
   பக்திமிக்க சுபகிருது சிலை திங்கள்
   பாடுவேன் மூவைவீர் திகதி மேல் அறுநான்கு திகதி வரை
3. வரை நடக்கும் வார நிகழ்வாக
   வருங்கால பலன்குறித்த ஆசி
   அரங்கன் கேட்க அகத்தியனும்
   அருளுவேன் இந்தியா தமிழகத்தின் நிகழ்வாக
4. நிகழ்வாக மக்களை நோக்கி
   நிலமதனில் பண்டிகைக் காலம்
   மகிழவே தரும் இலவசங்களை
   மக்களுக்கு உபயோகம் ஆகும் வண்ணம்
5. வண்ணமுடன் வளர்ச்சிப் பணிக்கான
   வருங்காலத் திட்டங்கள் ஆக்கி
   எண்ணம்தனில் உழைத்து வாழ
   எல்லாக் காலமும் வேலைவாய்ப்பு
6. வாய்ப்பு இருக்கும்படி செய்துமே
   வறுமைதனை நிரந்தரமாக
   அய்யமற உலகையே விட்டு
   அகற்றி காக்கும் ஆளுமையாக
7. ஆகவே சேவைகள் ஆற்றிட
   அகிலம் வியக்க மாற்றம்தனை
   வகைபட இந்தியா தமிழகம் கண்டு
   வல்லமை மிக்க தேசமாக மாறி
8. மாறியே தேவைகட்கு மேலான
   மக்களின் வருவாய்கள் பெருகி
   அறத்தின் வழி செயல்பாடுகளாக
   அனைவருள்ளும் மாற்றம் காணும்

9. காணவே மக்களை நோக்கியே
கட்டுப்பாடில்லா வதையென விதிக்கும்
ஞானமிலா வரிச்சுமை போக்கி
நம்பவைத்து மக்களின் நிதி அபகரித்து
10. அபகரித்து ஊழல் புரிபவர்களின்
அதிகவருவாய் சேமிப்பு ஆஸ்தியை
அபகரித்து அரசுடைமை ஆக்கி
ஆளுமைகள் மக்கள் வளர்ச்சிக்கு பயன்படுத்த
11. பயன்படுத்த பழுதடைந்த நிலையான
பரதம் தமிழகம் பொருளாதாரம்
பயமின்றி மிதமிஞ்சிய நிலைகண்டு
பசிபிணி ஏழ்மை இல்லா தேசமாகி
12. ஆகியே இந்தியா தமிழகம்
அரங்க மகான் விருப்பம் வழி
மகிழவே ஞானிகள் ஆட்சியாக
மாற்றம் கண்டடைந்து தேறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 17ம் நாள் **01.01.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் 24ம் நாள் **08.01.2023** ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

மனிதனை மனிதனே சற்றும் கருணையின்றி அழிக்கின்ற மாண்பற்ற செயல்கள் உலகமெங்கும் அதிகமாக நடந்து வருவதினாலே இனியும் தாமதிக்க முடியாது என்றே ஞானத்தலைவன் முருகப்பெருமானும் மனம் இறங்கி இந்த கலியுகத்தின் துன்பத்திலிருந்து மக்களை காத்து ரட்சிக்கவே தனது சக்தியாக அவதரிக்கச் செய்திட்ட உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்க மகா தேசிகனே, சற்குருவே உம்மைப் போற்றியே சுபகிருது வருடம் மார்கழி மாதம் 17ம் நாள் **01.01.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் மார்கழி மாதம் 24ம் நாள் **08.01.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்திலே இந்தியா தமிழகத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை ஆறுமுக அரங்க மகா தேசிகனார் அகத்திய மகரிஷி எம்மிடம் கேட்க வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

மக்கள் நலம்பெற வேண்டும் என்றே பண்டிகை காலத்தினிலே மக்களுக்கு அரசு வழங்கும் இலவச பொருட்களை மக்களுக்கு உபயோகம் ஆகின்ற விதத்திலே வருங்கால வளர்ச்சி பணிக்கான திட்டங்களாக ஆக்கியே வழங்க வேண்டுமப்பா. மக்கள் உழைத்து வாழ வசதியாக எல்லா காலத்திலும் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் விதத்திலே திட்டங்களை வகுத்து செயல்பட்டு மக்களின் வறுமையை நிரந்தரமாக போக்கிட வழிவகை செய்து மக்களை காக்கும் ஆளுமையாக சேவையாற்றிட உலகமே வியக்குமாறு நல்ல மாற்றங்களை இந்தியா தமிழகம் அடைந்து வல்லமை மிக்க தேசமாக மாறி மக்களின் தேவைக்கு அதிகமாக உள்நாட்டு வெளிநாட்டு வருவாய்கள் பெருகி தர்மத்தின் வழியிலே மக்கள் சென்று நாடே நல்ல மாற்றத்தை காணுமப்பா.

மக்கள் மீது விதிக்கப்படும் அதிகப்படியான வரிவிதிப்புகளை அகற்றி மக்களை காப்பதோடு மக்களை ஏமாற்றி மக்களின் பணத்தை அபகரித்து வாழும் ஊழல்வாதிகளிடமிருந்து மக்களின் பணத்தை திரும்ப பெற்ற அப்பணத்தினை மக்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்திட பொருளாதார சிக்கலில் தவிக்கும் பாரத தமிழகம் பொருளாதார மேம்பாடு அடைந்து மிதமிஞ்சிய வருவாய் நிலையை அடையும். நாட்டினில் பசிப்பிணி இருக்காது ஏழ்மை இருக்காது வறுமையற்ற ஏழ்மை நிலையற்ற முன்னேறிய தேசமாக இந்தியா தமிழகம் மாறி அரங்க மகான் விரும்பும் ஞானிகள் ஆட்சியாக தரும ஆட்சியாக மாறி மக்கள் எல்லாம் எல்லா வளமும் நலமும் பெற்று இன்புற்று வாழ்வார்கள் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–